வருகின்ற காலங்களில்—எப்படி இதை நிறைவேற்றலாம் என்பதற்காக உடனடியாக இந்தத் துறை அதைப் பரிசீலனை செய்யும், அதற்கான நடவடிக்கையிலே இறங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 447, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

447—

கோணக்கிடங்கல் ஆறு, அயனாவரம் வாரிகளில் தேங்கிக் கிடக்கும் காட்டாமணக்கு.

* 10953— திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் கோணக்கிடங்கல் ஆறு, அயனாபுரம் வாரிகளில் காட்டாமணக்கு மண்டியிருப்பதாலும், ஆக்கிரமிப்புகள் செய்திருப்பதாலும் தண்ணீர் வடிவதில் தடங்கள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பூதலூர் மற்றும் திருவையாறு ஊராட்சி ஒன்றிய எல்லைகளில் செல்லும் கோணக்கிடங்காற்றில் காட்டாமணக்கு மண்டியிருப்பதாலும், ஆக்கிரமிப்புகள் செய்திருப்பதாலும் தண்ணீர் வடிவதில் தடங்கள் இருந்து வந்தது. சென்ற ஆண்டில் ஏப்ரல், மே மாதங்களில் மண்வாரி இயந்திரங்களைக்கொண்டு அப்பணி நிறைவேற்றப்பட்டு இப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மணல் மேடுகள் எல்லாம் அகற்றப்பட்டு, காட்டாமணக்குத் திட்டுகள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அது நல்ல நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, என தொகுதியாகிய பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தையும், திருவையாறு ஒன்றியத்தையும் இணைத்துச் செல்லுகின்ற அந்த அயனாபுரம் வாரியிலும், கோணக்கிடங்கல் ஆற்றிலும் காட்டா

1993 ஏப்ரல் 23]

மணக்கு அதிகமாக இருந்தும், அவைகள் செப்பனிடப்படாமல் மண்கள் மூடி இருப்பதனால், அங்கே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலத்தில் பல இன்னல்களுக்கு ஆளாகின்ற நிலைமை அந்தப் பகுதியில் இருக்கிறது. அதை அகற்றுவதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன ஒரு பகுதி அந்த ஆற்றின் பகுதி எடுக்கப்பட்டிருக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில்தான் அயனாபுரம் என்ற மற்றொரு பகுதியிலே அகற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் படிப் படியாகச் செய்துகொண்டிருக்கிறோம். ஒரே நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து கால்வாய் களிலே இருக்கின்ற காட்டாமணக்குகளை நாம் அகற்ற முடியாது. நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே தான் மூன்று மடங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே சீர் செய்ததைவிட செய்திருக்கிறோம். இந்த ஆண்டு இந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இது குறித்து இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அயனாபுரம் வாரியில் உள்ள மணல் திட்டுகளை அகற்றுகின்ற பணிகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதற்கான முயற்சிகள் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கோணக்கிடங்கல் ஆறு என்ற அந்த ஆற்றில் சென்ற ஆண்டு ஒரு பாதிதான் புல்டோசர் வைத்து எடுத்தார்கள். மீதி எடுக்கப்படவில்லை. மேலும் அயனாபுரம் வாரியில் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து மழைக்காலங்களில் பெய்கின்ற மழைத்தண்ணீர் கூட அயனாபுரம் வாரி மூலம் வருகை தந்து வெள்ளப் பெருக்கு எடுத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு அங்கே இருக்கின்ற பயிர்கள் எல்லாம் சென்ற ஆண்டு நாசமாகிவிட்டன. அந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அந்த கிராமத்திலே சூழு கின்றபோது அரசு அதிகாரிகள் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்றபோது இந்த ஊருக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். நானே அந்தப் பகுதிக்குச் சென்றேன். ஆனால் நான் அந்த ஊருக்குள் போகமுடியவில்லை. அந்த அளவுக்கு வெள்ளப்பெருக்கு எடுத்து ஓடியது. ஆகையினால் இந்த ஆண்டு அதை புல்டோசர் வைத்து ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்வாய்களையும் சீரமைப்பது

என்பது ஓராண்டிலே இயலாத காரியம். ஏனென்றால் இது பல்வேறு காலகட்டங்களிலே செய்யப்படவேண்டிய ஒரு விஷயம். ஆகவேதான் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே தான் இப்படிப்பட்ட பணிகளை துவக்கியிருக்கிறோம். காலங் காலமாக இருந்த பிரச்சினைகளையெல்லாம் நாம் எதிர் நோக்க வேண்டிய காரணத்தினாலே பல வேலைகளை உடனடியாகச் செய்தாலும் கூட கொஞ்சம் காலக்கெடு தேவைப்படுகிறது. ஆகவேதான் சென்ற ஆண்டு பாதி வேலையை முடித்து இருக்கிறோம். இந்த ஆண்டு இதற்கான பணிகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே அவர் தெரிவித்து இருக்கின்ற பகுதிகளில் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு பணிகளைச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை அரசு ஏற்கனவே உணர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கி கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 448, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—

448—

சிவகாசிக்கருகே பாலம் கட்டுதல்.

*11520—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவகாசி வெம்பக்கோட்டை சாலையில் சிவகாசிக் கருகே செம்புக்குட்டி தெப்பம் சமீபம் பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்த போதிலும் அந்தப் பாலம் ஒரு காலத்தில் சிவகாசிக்கு வெளிப்புறமாக இருந்தாலும், சிவகாசி நகரம் வளர்ந்து வருகின்ற காரணத்தால் அங்கே